சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 26.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 47/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | சரவணகுமார் |
| தந்தை பெயர் | : | அறியநாயகம் |
| கிராமம் | : | காட்டூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | துணை வட்டாட்சியர் |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரவேற்பு துணை

வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கடந்த 2022 ஆம் ஆண்டு திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் அம்மையப்பன் கிராமத்தை சேர்ந்த அசோக் மகன் 1ம் எதிரி சஞ்சய் (எ) குணசீலன் என்பவர் இந்து முத்தரையர் சாதியை சேர்ந்தவர் என்றும், அதே ஊரை சேர்ந்த முத்தையன் மகன் 2ம் எதிரி பிரசாத் என்பவர் இந்து அகமுடையர் சாதியை சேர்ந்தவர் என்றும், ரவி மகன் 3ம் எதிரி ராஜசேகரன் என்பவர் இந்து கள்ளர் என சாதி சான்றிதழ் வழங்கினேன். 1 முதல் 3 எதிரிகளின் சாதி சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ-5 முதல் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சாதி சான்றிதழ்களை நான் 15.09.2022 ஆம் தேதி வழங்கினேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.26 18:27:32 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.